
### அண்ணா தி.மு.க., அமித்ஷா தி.மு.க.வாகிவிட்டதே!

# தேர்தலுக்கு முன் ஒரு கூட்டணி - தேர்தலுக்குப் பின் வேறொரு 'அமித்ஷா பிராண்ட்' கூட்டணி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மார்ச் 23-

எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டிய அ.தி.மு.க. - அமித்ஷா தி.மு.க.வாக ஆகிவிட்டது. இது பெரியார் நாடு - பீகார் அல்ல; 'அமித்ஷா பிராண்ட்' கூட்டணி இங்கு எடுபடாது. தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுத் தேர்தல் அரசியல் களம் குறித்து, அன்றாடம் வெளிவரும் செய்திகளையும், தகவல்களையும் கண்டு, பரிதாபப்படுவதா? வெட்கப்படுவதா? வேதனைப்படு வதா? என்பதை நினைத்து, வருந்தி, புரிந்து, 'திராவிட மாடல்' ஆட்சியை மீண்டும் இரண்டாவது முறையாக சென்னை கோட்டையில் ஆட்சிச் சிம்மாசனத்தில் அமர்த்திட, மக்கள் - வாக்காளர் பெருமக்கள் தெளிவான, உறுதியான முடிவுக்கு வந்துவிட்டனர்!

**அண்ணா தி.மு.க.வா – அமித்ஷா தி.மு.க.வா?**

'அ.தி.மு.க.தான் கூட்டணிக்குத் தலைமை' என்று பெயரளவில் கூறிவிட்டு, இன்னொருபுறம், அமித்ஷா (அண்ணா) தி.மு.க.வாக அதனை டில்லி ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.விடம் அடகு வைத்து, எல்லாவற்றிற்கும் டில்லிக்குக் காவடி தூக்கி, அதன் முகவரியை இழக்க வைத்துவிட்டார் பரிதாபத்திற்குரிய எதிர்க்கட்சித் தலைவரான பழனிசாமி.

அரசியல் வியூகத்தில் அவர் எவ்வளவு வினை தேர்ந்தவர் என்பதைப் புரிந்துகொள்ள, சில மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரே ஒரு நிகழ்வை நினைவுபடுத்திக் கொண்டாலே போதும்!

அவர் சென்றிருந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், நடிகரின் புதுக்கட்சிக் கொடியைச் சுட்டிக் காட்டியதைக் கண்டு, (யாரோ காட்டினர் என்பதை வைத்து) உடனே அந்த நடிகரின் கட்சி தனது தலைமையில் உள்ள கூட்டணியில் சேர்ந்து கொள்ள முடிவு செய்துவிட்டதாகவே யூகித்து, கூட்டணிக்கு இப்போதே ''பிள்ளையார் சுழி'' போட்டாகி விட்டது என்று முக மலர்ச்சியுடனே முழக்கமிட்ட சோக நாடக வசனம் ஒன்றே போதாதா?

**அன்று இராமாபுரம், போயஸ் தோட்டம் – இன்று டில்லியா?**

மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றவர்கள் அ.தி.மு.க.வுக்குத் தலைமை தாங்கி நடத்திய காலகட்டத்தில், டில்லிதான், தமிழ்நாட்டிற்கு (இராமாபுரத்திற்கும், போயஸ் தோட்டத்திற்கும்) வந்து, பேசி கூட்டணி அமைத்தது.

இப்போதோ, அமித்ஷாக்கள் அக்கூட்டணியைத் தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) என்று அழைப்பதோடு, எடப்பாடி பழனிசாமி அவர்களை ஏதோ பொம்மை போல வைத்துவிட்டு, அவர்களே செயலாற்றுகின்றனர்!

மூன்று முறை பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு (மதுராந்தகம், மதுரை, திருச்சி) வந்தார், சென்றார். எந்தத் தாக்கமும் ஏற்படவே இல்லை.

**நடிகர் கட்சியை இழுக்க முயற்சி!**

அதனால், தங்கள் கூட்டணிக்குத் தோல்வி உறுதி என்பதை அரசியல் ரீதியாகக் கணித்து, நடிகர் கட்சியை எப்படியாவது வளைத்து, தமது கூட்டணியில் கொண்டு வந்து, தி.மு.க.வுக்குப் பலமான போட்டியை உருவாக்கலாம் என்று திட்டமிட்டு, அதற்குரிய ஆயுதங்களாக ஒருபுறம் சி.பி.அய்., மற்றொரு புறம் அவரது புதிய படமான 'ஜனநாயகன்' திரைப்படம் வெளிவர முடியாத அளவிற்குத் தணிக்கைத் தடங்கல்களைத் தொடரும் வியூகம் இறுக்கியது.

**எத்தனை எத்தனை இடங்களில் பாய்ச்சல்கள்!**

இதுபற்றி டில்லியில் ஒரு களம் மட்டும் போதாது என்று கருதி, மும்பையிலும் பல்முனை அழுத்தங்களை அவருக்குத் தந்துள்ளனர் என்று 17.3.2026 அன்று 'தினமலர்' நாளேட்டில் வெளிவந்த செய்தியை அப்படியே எடுத்துப் போட்டு, சில விளக்கங்களை 19.3.2026 அன்று அறிக்கையில் எழுதினோம். அங்கு என்ன நடந்தது? என்று இன்றைக்கு அதே நாளேடு, இன்று (21.3.2026) சில செய்திகளையும் வெளியிட்டுள்ளது.

டில்லிக்கு நடிகர் சென்றிருந்தபோது, உள்துறை அமைச்சர் அமித்ஷா மகன் ஜெய்ஷா என்பவருக்கு நெருக்கமானவர்களை அங்கு சந்தித்ததாகவும், அங்கிருந்து சென்னை திரும்பிய பின்னர், மீண்டும் 'வளைகாப்பு'க்காக என்று சொல்லி, மும்பைக்குத் தனி விமானத்தில் நடிகர் சென்றிருப்பதாகவும், அங்கும் சில தொழிலதிபர்களை சந்திக்க விருப்பதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது. டில்லியிலும், மும்பையிலும் மாறி மாறி நடக்கும் சந்திப்புகள் குறித்த செய்திகளை - வரி பிளந்து ஆய்வு செய்தால், (Reading between lines) ஒன்று நன்றாகப் புரியும்!

**'பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது!'**

''பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது'' - இப்போது என்னால் முடியாது, ''அடுத்துப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று அந்த நடிகர் கூறியதாக 'தினமலர்' ஏட்டின் செய்தி முடிப்பு கூறுகிறது!

இதிலிருந்து பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்.சை எதிர்ப்பதற்கு நடிகர் இயக்கம் தயாராக இல்லை. ஆனால், பா.ஜ.க.வை தனது 'கொள்கை எதிரி' என்று வசனத்தை மட்டுமே பேசுவார். தி.மு.க. ஆட்சியைத் தடுத்து, அதன்மீது 'இல்லாத பொல்லாத' குற்றச்சாட்டுகளை - அப்பாவி ரசிகர்கள் வாயிலாகப் பரப்பும் ஊடகங்களின் திட்டமிட்ட ஏற்பாடுகளை நம்பியே அவர் களம் இறங்கியுள்ளார் என்பது நாளும் வெளிச்சத்திற்கு வந்து கொண்டே இருப்பது புரியவில்லையா?

**தி.மு.க. அரசியல் எதிரியாம் – பா.ஜ.க. கொள்கை எதிரியாம்!**

இரண்டில் எது முதலில் எதிர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதை அரசியலில் 'அனா, ஆவன்னா' புரிந்த எவரும், எது ஆபத்து என்று சொல்வார்களே!

''பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்பதை உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார் என்றால், அதற்கு என்ன அரசியல் அர்த்தம்?

**பி.ஜே.பி.யின் 'பி டீம்'தான் நடிகர் கட்சி!**

தமிழ்நாட்டுத் தேர்தலுக்குப் பின், பல சித்து வேலைகளுக்கு, இப்போதே தயாராகிவிட்டார்; மற்றொரு 'மும்பை - மராத்தி, அரியானா, பீகார் வேலைகள்' கருக் கொள்ளத் தொடங்கிவிட்டன என்பதுதானே!

இதை நன்கு முன்பே கணித்து 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சரும் தி.மு.க. கூட்டணியின் ஆற்றல்மிகு தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், ''நடிகர் கட்சி பி.ஜே.பி.யின் 'பி டீம்''' என்று குறிப்பிட்டது எத்தகைய முன்னோக்கு - சரியான கணிப்பு என்பது புரிந்துவிட்டது!

எனவே, தமிழ்நாட்டிலும், மற்ற வடபுலத்து வித்தைகளை செய்து ''தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணி'' அது முடிந்து முடிவு எப்படியானாலும் - அதற்குப் பிறகு ''பா.ஜ.க. அமித்ஷா பிராண்ட் அரசியல் ஆட்சிக் கூட்டணி என்ற கட்சித் தாவலின் 'புதிய அவதாரங்கள்' உருவாக்கம்'' என்று திட்டங்கள் ஓடுகின்றன போலும்!


**இது பீகார் அல்ல – பெரியார் நாடு!**

மறவாதீர், இது பெரியார் நாடு, பீகார் அல்ல; இங்கே தேர்தல் முடிவு களே திட்டவட்டமான மாற்றமாக இருக்குமே தவிர, ஏமாற்றமாக, 'குடுகுடுப்பைக்காரரின் ஒட்டுப் போட்ட பட்டுச்சட்டையாக' ஒருபோதும் அமையாது என்பது உறுதி!

என்றாலும், அரசியல் எவ்வளவு மலிவான கீழிறக்கம்? தமிழ்நாட்டு அரசு, அரசியலைப்பற்றி யார் யாரெல்லாம் முடிவு செய்வது என்ற ஒரு விவஸ்தையே இல்லையா? விலா நோக சிரிப்பாய் சிரிக்கிறது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# முதல்வரின் தீர்க்கதரிசனம்!




தமிழக வாக்காளர்களே... புரிகிறதா சூட்சமம்? 2026 தேர்தல் கழகத்துக்கும் டெல்லிக்குமானதே... என அன்றே அடித்துச் சொன்னவர் நமது முதல்வர். முரட்டு அடிமை இதை மூர்க்கத்தனமாக எதிர்த்து பேசினார். மக்கள் குழம்பி போனார்கள். ஆனால் நேற்று முரட்டு அடிமை டெல்லிக்கு போய்... பல மணி நேரம் காத்திருந்து.... தங்களின் அமித்ஷா முன்னேற்றக் கழகத்தின் தலைவரை சந்தித்து பல கட்டளைகளை பெற்று வந்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து கூட்டணித் தலைவர்களும் அங்கே போய் சனாதனத் தலைவரின் விஸ்வரூப தரிசனம் கண்டு.... தங்களுக்கான கட்டளைகளை பெற்று வந்துள்ளனர்.

தமிழர்களே... சூட்சமம்? குறுக்கு வழியிலே.. முரட்டு அடிமை கூட்டணி மூலம் வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்து.... தமிழ் நாட்டில் அமித்ஷா முன்னேற்றக் கழகம் ஆள நினைக்கிறது. தமிழக மக்கள் என்ன முட்டாள்களா? கண்ணை மூடிய பூனைகளா? அப்படி இருந்திருந்தால் கடந்து போன அத்தனை தேர்தல்களிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு தொடர் வெற்றிகளை பரிசளித்திருப்பார்களா?.......

அண்ணாவின் தம்பிகள் தெளிவானவர்கள்... கலைஞரின் உடன்பிறப்புகள் உண்மையானவர்கள்.... புரட்சி நடிகரின் ரத்தத்தின் ரத்தங்கள் விசுவாசமானவர்கள். ஸ்டாலினின் தொண்டர்கள் பகுத்தறிவுவாதிகள். எந்த ரூபத்தில் எதிரி நுழைந்தாலும் எல்லையிலேயே தடுத்து நிறுத்தி... திருப்பி விரட்டி விடும் வல்லமை படைத்தவர்கள். வேண்டுமென்றால் வந்து பார்... அப்போது தான் தெரியும் நீ யார் – நான் யார் என்று? பதவிக்காக உழைப்பவன் நீ! தமிழக மக்களுக்காக உழைப்பவர் நான்! மதநீதி சொல்பவன் நீ! சமநீதி காண்பவன் நான்!! முதல் மரியாதை கேட்பவன் நீ! அனைவருக்கும் சுயமரியாதை கேட்பவன் நான்! கொள்ளையடித்து... கொள்கை அற்று... ஜாதி வளர்க்கும் கூட்டத்தோடு நீ! அண்ணா சொன்ன வழியிலே கடமை கண்ணியம் கட்டுப்பாட்டோடு நான்!..

. உரிமைகளைப் பறித்து ஒரே நாடு காண நினைப்பவன் நீ! உறவுக்கு கை கொடுத்து உரிமைக்கு குரல் கொடுத்து மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி காண நினைப்பவன் நான்! ஒற்றை மதத்தில் உன் ஆட்சி! சர்வ மதங்களோடும் சமதர்மவாதிகளுடன் என் ஆட்சி! தேர்தல் மூலம் நீ கேட்பது சர்வாதிகாரம்! நான் கேட்பது ஜனநாயகம் காக்கும் உரிமை! கார்ப்பரேட்டுகளின் கணக்கில் வராத கோடிகளுக்கு காவலர் நீ! உழைத்துக் களைத்து ஊதியம் பெற முடியாத ஏழைகளின் உரிமை காப்பவன் நான்! வந்தேறிகளை வாழவைத்துக் கொண்டிருப்பவன் நீ! சொந்த நாட்டுக்காரன் குடிசைகளுக்கு இதுவரை வராத சுதந்திர வெளிச்சத்தை கொண்டு சேர்க்க போராடுகிறவன் நான்!....... உளுத்துப் போன மூங்கில் பந்தலுக்கு உதவாது பாடைக்கும் உதவாது! அதே நிலை தான் உன் சனாதன சன்மார்க்க அரசியல்! என் திராவிட மாடல்.. ஏழைக்கானது... இல்லாதவனுக்கானது.. உழைப்பவனுக்கானது.... சமநீதிக்கானது... பெண் உரிமைக்கானது.. இந்திய மக்களுக்கானது! இன்னும் சிந்திப்போம்...



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# 'திராவிட மாடல்' ஆட்சி தமிழ்நாட்டில் மீண்டும் அமைய தீவிர பணியாற்றுவோம்!

## நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. கூட்டத்தில் தீர்மானம்!




சென்னை, மார்ச். 23-

தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் பணியாளர்களுக்கு 10% முதல் 22% சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டி தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம் அவர்களின் அறிவுறுத்தலின்படி நேற்று முன்தினம் (21.03.2026, சனிக்கிழமை) காலை தொ.மு.ச. பேரவை அலுவலகமான கலைஞரகத்தில், மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையிலும், மாநிலப் பொருளாளர் இரா. பழனியப்பன் துணைத் தலைவர் மரு. இரா. இராஜன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

தொ.மு.ச. பேரவை தலைவர் கி. நடராஜன், பொருளாளர் கோ.சி. வள்ளுவன் துணைத்தலைவர் இரா. பொன்னுராம் மற்றும் உழைப்பாளி ஆசிரியர் அருணகிரி , ஏனைய நிர்வாகிகளும் சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இக் கூட்டத்தில் பண்டக சாலை தொ.மு.ச. நிர்வாகிகள் டி.யு.சி.எஸ். - இராஜன், சாமிநாதன், காஞ்சி பண்டக சாலை -எம்.ஜானகிராமன், சிந்தாமணி (சென்னை) - எம். பிரிட்டா, செங்கல்பட்டு - கார்த்திக்குமார், திருவள்ளூர் - ஜோதி, திருவண்ணாமலை - பாண்டியன், வேலூர்- பாபு,சேலம் - சதீஷ்குமார், தர்மபுரி - சிங்காரவேல், திருச்சி - (சிந்தாமணி) - ராஜேந்திரன், மதுரை - மணி, திருநெல்வேலி - அய்யப்பன், சிவகங்கை - நாகராஜன், திருவாரூர் - காளிதாஸ், தஞ்சாவூர் - விசுவநாதன், கும்பகோணம் சந்திரசேகரபுரம்) - கார்த்திக், பொள்ளாச்சி- எம். ராகவன் மற்றும் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அச் சங்கத்தின் பொதுச்செயலாளர் டி.யு.சி.எஸ்.சு.பத்மநாபன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உலக நாடுகளெல்லாம் தமிழ்நாட்டு செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வண்ணம் நடப்பதுடன், பாராட்டுகளை பெற்று நல்லாட்சி நடத்தும் அவர்கள் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 10% முதல் 22%சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கியமைக்கு சிரம் தாழ்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர். கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.,

நு.கூ.மொ.வி.பண்டக சாலைகள் ஊழியர்களின் ஊதிய உயர்வுகோரிக்கைகளை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்அவர்களிடம் நேரில் வழங்கியும், கோரிக்கை நிறைவேறும் வரை எங்களை தினமும் ஊக்கப்படுத்தியும் நல்லதொரு ஊதிய உயர்வை பெற்றுத்தந்த தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் தலைவர் கி.நடராசன் பொருளாளர் கோ.சி.வள்ளுவன், துணைத்தலைவர் இரா. பொன்னுராம் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

23.04.2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தொடர வெற்றிக்கு முழுமூச்சாக பாடுபடுவோம் என்பதை முழுமனதோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஒவ்வொரு தொகுதிகளிலும் திராவிட மாடல் நாயகன், தொ.மு.ச.பேரவை பொதுச்செயலாளர், தலைவர், பொருளாளர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு பணியாற்றுவோம். என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்ட 3% அகவிலைப்படியை அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் 58% வழங்க வேண்டி மீண்டும் வலியுறுத்தி பெறுவோம்.

ஊதிய உயர்வு ஆணையில் காணப்படும் ஒரு சில நிபந்தனைகளை தளர்த்தக்கோரி பதிவாளர் அவர்களிடம் முறையிட்டு திருத்தம் கோரப்படும்.

பணி வரன்முறைப் படுத்தவும், நிரந்தரப்படுத்தாமல் ஒரு சில சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரப் படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசின் பல்வேறு நலத் திட்டங்களை பல்வேறு சிரமங்களுக்கிடையேயும் அன்றாடம் கொண்டு சேர்க்கும்கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் தமிழ்நாடு அரசின் மூலம் ஓய்வூதியம் வழங்கவேண்டி தொ.மு.ச. பேரவை மூலம் அரசாங்கத்தை வலியுறுத்தி பெற்றுதர வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் அன்னங்குடி பகுதியைச் சேர்ந்த அ.ம.மு.க. மாவட்ட இளம் பெண்கள் பாசறை செயலாளர் கௌதமி சந்தர் அந்தகட்சியில் இருந்துவிலகி வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார்கள்.உடன் ஒன்றிய கழக செயலாளர் ஜெயா முருகேசன்,அன்னங்குடி சிவா , மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி, அசாம், கேரளா சட்டமன்றத் தொகுதிகளுக்கு

# வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவு!

புதுச்சேரி, மார்ச்.23-

2-ம் கட்ட குலுக்கல் நடத்தப்பட்டு ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் எந்த இயந்திரம் செல்லும் என்பது தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, அசாம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் வரும் ஏப்ரல் 9-ந்தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும், விவிபாட் இயந்திரங்களின் முதற்கட்ட குலுக்கல் முறை ஒதுக்கீடு நிறைவு பெற்றுள்ளது.

இது தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ''கடந்த 15-ந்தேதி 5 மாநில தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி வரும் ஏப்ரல் 9-ந்தேதி புதுச்சேரி, அசாம், கேரளாவில் சட்டமன்ற தேர்தலும், மேலும் 6 மாநிலங்களில் இடைத்தேர்தல்களும் நடைபெற உள்ளன.

தேர்தல் விதிமுறைகளின்படி வாக்குப்பதிவு இயந்திரங்கள் 2 கட்டங்களாக ஒதுக்கப்படுகின்றன. தற்போது மாவட்ட கிடங்குகளில் இருந்து சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவடைந்துள்ளது.

இந்த ஒதுக்கீடு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளிப்படையாக நடத்தப்பட்டது. குலுக்கல் முறையில் ஒதுக்கப்பட்ட இந்த இயந்திரங்களின் பட்டியல், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்கள் தற்போது அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்படும். வேட்பு மனுக்கள் இறுதி செய்யப்பட்ட பிறகு 2-ம் கட்ட குலுக்கல் நடத்தப்பட்டு, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் எந்த இயந்திரம் செல்லும் என்பது தீர்மானிக்கப்படும்.

அந்த வாக்கு இயந்திர பட்டியலும், போட்டியிடும் வேட்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தி.மு.க. பொறியாளர் அணி – வர்த்தகர் அணி – நெசவாளர் அணி – அயலக அணி – கல்வியாளர் அணி ஆகிய அணிகளின்

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி - வர்த்தகர் அணி - நெசவாளர் அணி - அயலக அணி - கல்வியாளர் அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (23.3.2026 - திங்கட்கிழமை), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கீழே குறிப்பிட்டுள்ள கால அட்டவணைபடி நடைபெறும்.

**23.03.2026 (திங்கட்கிழமை)**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | - | பொறியாளர் அணி |
| காலை 10.30 மணி | - | வர்த்தகர் அணி |
| காலை 11.00 மணி | - | நெசவாளர் அணி |
| காலை 11.30 மணி | - | அயலக அணி |
| பகல் 12.00 மணி | - | கல்வியாளர் அணி |

இக்கூட்டத்தில் தி.மு.க. பொறியாளர் அணி – வர்த்தகர் அணி – நெசவாளர் அணி – அயலக அணி – கல்வியாளர் அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 22.3.2026

**திருச்சி சிவா, எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.